ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 10.10 – திருத்தாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10.10 – திருத்தாய்

‡ திருத்தாய் செம்போத்தே ! ⋆
திருமா மகள் தன் கணவன் ⋆
மருத்தார் தொல் புகழ் ⋆
மாதவனை வர ⋆
திருத்தாய் செம்போத்தே ! ‖ **10.10.1** ‖

கரையாய் காக்கைப் பிள்ளாய் ⋆
கரு மா முகில் போல் நிறத்தன் ⋆
உரை ஆர் தொல் புகழ் ⋆
உத்தமனை வர ⋆
கரையாய் காக்கைப் பிள்ளாய் ! ‖ **10.10.2** ‖

கூவாய் பூங்குயிலே ⋆
குளிர் மாரி தடுத்துகந்த ⋆
மாவாய் கீண்ட ⋆
மணி வண்ணனை வர ⋆
கூவாய் பூங்குயிலே ! ‖ **10.10.3** ‖

கொட்டாய் பல்லிக் குட்டி ⋆
குடம் ஆடி உலகளந்த ⋆
மட்டார் பூங்குழல் ⋆
மாதவனை வர ⋆
கொட்டாய் பல்லிக் குட்டி ! ‖ **10.10.4** ‖

‡ சொல்லாய் பைங்கிளியே ⋆
சுடர் ஆழி வலன் உயர்த்த ⋆
மல் ஆர் தோள் ⋆
வட வேங்கடவனை வர ⋆
சொல்லாய் பைங்கிளியே ! ॥ **10.10.5** ॥

கோழி கூ என்னுமால் ⋆
தோழி ! நான் என் செய்கேன் ⋆
ஆழி வண்ணர் ⋆
வரும் பொழுதாயிற்று ⋆
கோழி கூ என்னுமால் ॥ **10.10.6** ॥

காமற்கென் கடவேன் ⋆
கரு மா முகில் வண்ணற்கல்லால் ⋆
பூ மேல் ஐங்கணை ⋆
கோத்துப் புகுந்தெய்ய ⋆
காமற்கென் கடவேன் ॥ **10.10.7** ॥

இங்கே போதுங்கொலோ ⋆
இன வேல் நெடுங்கண் களிப்ப ⋆
கொங்கார் சோலைக் ⋆
குடந்தைக் கிடந்த மால் ⋆
இங்கே போதுங்கொலோ ॥ **10.10.8** ॥

இன்னார் என்றறியேன் ⋆
அன்னே ! ஆழியொடும் ⋆
பொன்னார் சார்ங்கம் உடைய அடிகளை ⋆
இன்னார் என்றறியேன் ॥ **10.10.9** ॥

‡ தொண்டீர் ! பாடுமினோ ⋆
சுரும்பார் பொழில் மங்கையர் கோன் ⋆
ஒண் தார் வேல் ⋆
கலியன் ஒலி மாலைகள் ⋆
தொண்டீர் ! பாடுமினோ ॥ **10.10.10** ॥

அடிவரவு — திருத்தாய் கரையாய் கூவாய் கொட்டாய் சொல்லாய் கோழி காமற்கு இங்கே இன்னார் தொண்டீர் குன்றம்

திருத்தாய் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்